**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 22** **நாள்: 28.01.2025**

**மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, சர்மாநகர் சென்னை உயர்நிலைப் பள்ளியில் 2025ஆம் கல்வியாண்டிற்கான பள்ளி ஆண்டு விழா மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, இன்று (28.01.2025) மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-36, சர்மாநகர் சென்னை உயர்நிலைப் பள்ளியில் 2025ஆம் கல்வியாண்டிற்கான பள்ளி ஆண்டு விழாவினைத் தொடங்கி வைத்து, விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு மேயர் அவர்களின் 2023-24ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பில், சென்னை தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களால் திட்டமிடப்பட்டு ஆண்டுதோறும் ஆண்டு விழா நடத்தப்படும். இந்த விழாவில் மாண்புமிகு மேயர், பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர்கள், மதிப்பிற்குரிய துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு மாணவர்களின் முன்னேற்றம், பள்ளியின் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் செயல்பட்டு, பள்ளியின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கு வழிகாட்டுவார்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில், 2025ஆம் கல்வியாண்டிற்கான ஆண்டு விழா பெருநகர சென்னை மாநகராட்சியின் 417 சென்னை பள்ளிகளில் நடைபெறவுள்ளது. இதனைத் தொடங்கி வைக்கும் விதமாக, மாண்புமிகு மேயர் அவர்கள் தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-36, சர்மாநகர் சென்னை உயர்நிலைப் பள்ளியில் பள்ளி ஆண்டு விழாவினை இன்று தொடங்கி வைத்து, விழாப் பேருரையாற்றினார். இதனைத் தொடர்ந்து, அதிக மதிப்பெண் பெற்ற மாணவர் மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். பின்னர், மாணவ, மாணவியரின் கண்கவரும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

**இவ்விழாவில் மாண்புமிகு மேயர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது** :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளில் முதல்முறையாக ஆண்டு விழா நிகழ்ச்சியானது இந்த ஆண்டு இப்பள்ளியில் தொடங்கப்பட்டுள்ளது. பள்ளிகளில்

மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிகள் குறித்து பெற்றோர் அறிந்து கொள்ளும் வகையில் இந்த ஆண்டு விழாவானது கொண்டாடப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வியையும், சுகாதாரத்தையும் தன்னுடைய இரு கண்களாக பார்க்கிறார்கள். அந்த வகையில் கல்வித்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கையில் அதிக நிதி ஒதுக்கீடு செய்து, பல்வேறு திட்டங்களை கொண்டு வந்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கையிலும் கல்வித்துறைக்காக 27 அறிக்கைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தனியார் பள்ளிகளுக்கு நிகராக சென்னை பள்ளிகள் திகழ வேண்டும் என்பதற்காக மாணவர்களுக்கு அடையாள அட்டைகள், காலணிகள், சீருடைகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், தனியார் பள்ளிகளுக்கு நிகராக சென்னை பள்ளிகளின் கட்டமைப்புகள் திகழ வேண்டும் என்பதற்காக சிட்டீஸ் திட்டம் மூலமாக பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. சென்னை பள்ளி மாணவர்கள் விளையாட்டு, கல்வி, கலைநிகழ்ச்சிகள் ஆகியவற்றில் ஒவ்வொருவரும் தனித்துவமாக விளங்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அங்கீகரிகக்கப்பட்டு வருகின்றனர்.

சென்னை பள்ளி மாணவர்கள் இசையில் சிறந்து விளங்கும் வகையில் சென்னை பள்ளிகளுக்கு வயலின், கிட்டார், கீபோர்டு உள்ளிட்ட இசைக்கருவிகள் வழங்கப்பட்டு, அதற்கான ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு சில மாணவர்கள் கல்வியிலும், சில மாணவர்கள் விளையாட்டிலும் ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள். இவர்களுக்காக கால்பந்து, கேரம், செஸ் ஆகிய விளையாட்டுகளில் சாதிக்க விரும்பும் மாணவர்களுக்காக உள்விளையாட்டுகள் மூலமாகவும், கலைநிகழ்ச்சிகளில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பெருநகர சென்னை மாநகராட்சியின் அறிவிப்பில் கொண்டுவரப்பட்டு தற்பொழுது நடத்தப்பட்டு வருகிறது.

பெண் குழந்தைகள் கராத்தே போன்ற தற்காப்புக் கலைகளை கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்டு, மாணவியருக்கு தற்காப்புக் கலைகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. இந்த தற்காப்புக் கலையில் அடுத்த மாதம் கின்னஸ் சாதனை நிகழ்த்தப்படவுள்ளது.

இந்தப் பள்ளியில் படித்து வெளியில் பெரிய இடங்களில் வேலை பார்த்து கொண்டிருக்கும் முன்னாள் மாணவர்கள் பேசும்போது நாங்கள் படிக்கும் போது இருந்த கட்டமைப்புகளை விட தற்போது சென்னை பள்ளிகளில் கட்டமைப்புகள் மேலும் சிறப்பானதாக அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மாணவர்களாகிய நீங்கள் உங்கள் கற்றல்

திறன் மற்றும் பிற செயல்பாட்டுத் திறன்களில் சிறந்து விளங்கி உங்களின் தனித்திறமையை வெளிப்படுத்தலாம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கல்வி ஒன்றே அழியாத சொத்து என்ற கருத்தின் அடிப்படையில், சிறந்த கல்வி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பள்ளிக் கல்வி மட்டுமில்லாமல் உயர்கல்வியும் தொடர்ந்து மாணவியர் பயில வேண்டும் என்பதற்கிணங்க, புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டு, மாணவியருக்கு மாதம் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, மாணவர்களாகிய உங்களுடைய கடமை படிப்பு மட்டும் தான். கல்வி மட்டும் தான் என்றைக்கும் கைக்கொடுக்கக் கூடிய ஒரு விஷயம். இந்தப் பள்ளிப் பருவம் என்பது மனஅழுத்தம் இல்லாத வாழ்க்கை. அதனால், நண்பர்களுடன் இணைந்து மகிழ்ச்சியாக இருங்கள். கிடைக்கக்கூடிய நேரங்களில் விளையாட்டுகளிலும் கவனத்தை செலுத்துங்கள். ஆனால், கல்வியும் முக்கியம் என்பதை மனதில் வைத்துக் கொண்டு அனைத்து மாணவர்களும் நன்றாக படிக்க வேண்டும். அதனையே இலக்காக வைத்து முன்னோக்கி செல்லுங்கள் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.டி. சேகர், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு. மு. மகேஷ் குமார், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர்கள் பாலவாக்கம் திரு. த.விஸ்வநாதன் (கல்வி), திருமதி சர்பஜெயதாஸ் நரேந்திரன் (வரிவதிப்பு (ம) நிதி), மண்டலக்குழுத் தலைவர் திரு. நேதாஜி யு.கணேசன், மாமன்ற உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். மலைச்சாமி மற்றும் அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**